செ.வெ.எண்: 08/ஜூன் நாள்: 06.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தீருதவித் தொகையினை

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (06.06.2016) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றார். அதன் பின்பு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தீருதவித் தொகையினை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். அவற்றில் தனிநபர் மனுக்களான திருமண நிதியுதவித் திட்டம், முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல் உள்ளிட்ட 150 மனுக்களும், பொதுநல மனுக்களான சாலைவசதி, போக்குவரத்துவசதி, பள்ளி வசதி , குடிநீர் வசதி உள்ளிட்ட 15 மனுக்கள் என மொத்தம் 165 மனுக்கள் வரப்பெற்றது. கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அம்மனுக்களை ஆய்வு செய்து ,அரசு விதிகளுக்குட்பட்டு மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாதத்திற்குள் தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அதன்பின்பு, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களான சிறைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஜே.சபிதா ஜோதி என்பவருக்கு ரூ.60,000/- தீருதவித் தொகையும், நல்லிருக்கை கிராமத்தைச் சேர்ந்த எஸ்.தீபதர்ஷின் என்பவருக்கு ரூ.60,000/- தீருதவித் தொகையும், இளையான்குடி கிராமத்தைச் சேர்ந்த எல்.கணேசமூர்த்தி என்பவருக்கு ரூ.15,000/- தீருதவித் தொகையும், பாண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.நாகராஜன் என்பவருக்கு ரூ.15,000/- தீருதவித் தொகையும், ஏனாதிகோட்டை கிராமத்தைச் சேர்ந்த ஏ.மகேந்திரன் என்பவருக்கு ரூ.15,000/- தீருதவித் தொகையும், கரூப்பூர் கிராமத்தைச் சேர்ந்த ஏ.பிரபு என்பவருக்கு ரூ.60,000/- தீருதவித் தொகையும் என மொத்தம் ரூ.2.25 மதிப்பிலான தீருதவித்தொகையினை மேற்கண்ட நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். அதன்பின்பு மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் சாயல்குடியைச் சேர்ந்த பவானி என்பவருக்கு ரூ.9,500/- மதிப்பிலான காதொலிக் கருவியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.எம்.முருகசெல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.சீ.மகேஸ்வரன், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சி.தங்கவேல் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**